(165)

# Chennai Metropolitan Development Authority

## PLANNING PERMIT

(Sec 49 of T & C. P. Act 1971)

PERMIT No. 14824. PP/NHRB/147/2022 Date of Permit 20 - 05 - 2022

File No PP/NHRB/C/0096/2022

Name of Applicant with Address m/s. M.P. Developers, Rep. by its Partner Thiru. M. Praveen GPA for Tmt. M. Manimagalai D.No. 3/1B, Plot No. 2, Tannery street, Somasundaram nagar, Pallavaram, Chennai - 600 043.

Date of Application 15.02.2022

Nature of Development : ~~Layout/Sub-division of Land~~/Building construction/ ~~Charge in use of Land/Building~~ ✓

PP for the proposed construction of Stilt floor + 4 Floors Residential building with 32 dwelling units (Affordable Housing)

Site Address at plot nos. 7 & 8, P Dot Express Road, Kundrathur, Chennai comprised in S.Nos 509/1A part, new S.No. 509/1A2A (as per document), S.Nos 509/92 & 509/93 (as per patta) of Kundrathur village within the limits of Kundrathur Town Panchayat.

Division No.

Development Charge paid Rs. 4,500/- for land & for Bldg. Paid Rs. 31,000/- Challan No. CMDA/PP/Ch/7459/2022 ~~Date~~ Date 11/5/2022

✓ PERMISSION is granted to the ~~layout/sub-division of land~~/building ✓ construction/~~change in use of land/building~~ according to the authorised copy of the plan attached hereto and subject to the condition overleaf.

3. The permit expires on 19 - 05 - 2030 the building construction work should be completed as per plan before the expiry date. If it is not possible to Complete the construction, ~~request for renewing the planning permit should be submitted to Chennai Metropolitan Development Authority before the expiry date. If it is not renewed before the said date~~ fresh. Planning Permission application/has to be submitted for continuing the construction work when the Development Control Rules that may be currently in force at that time will be applicable. ~~If the construction already put up is in deviation to the approved plan and in violation of rules. Planning permit will not be renewed.~~

[signature] 20/5/2022

For MEMBER SECRETARY

19/5/2022

[signature]

167

# குன்றத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயலாணைகள்

பிறப்பிப்பவர் : ந.தாமோதரன், எம்.பி.ஏ.,

க.உ.எண் : 270/2022

மூ.மு.எண் : 1014/2022

நாள்.28.06.2022

பொருள் :- கட்டிட வரைபட அனுமதி – குன்றத்தூர் நகராட்சி – **குன்றத்தூர் கிராமம் – பி டாட் ஜி எக்ஸ்பிரஸ் ரோடு, நில அளவை எண்.509/1A Part, புதிய நில அளவை எண்.509/1A2A, பட்டாவின்படி நில அளவை எண்.509/92 & 509/93, மனை எண்.7 & 8** - Stilt Floor + 4 தளங்களுடன் கூடிய 32 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் / சுற்றுச்சுவர் / கிணறு முதலியன கட்டுவதற்கு அனுமதி வழங்குதல் – சார்ந்து.

பார்வை :-
1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும கடித எண்.PP/NHRB/C/0096/2022 நாள்.20.05.2022. (திட்ட அனுமதி எண்.14824 நாள்.20.05.2022)
2. நகரமைப்பு ஆய்வாளர் ஆய்வறிக்கை நாள்.16.06.2022.
3. வரைபட அனுமதிக் கட்டணம் ரூ.1149000/- செ.சீ.எண்.879/2022-2023 நாள்.28.06.2022 (வங்கி கேட்பு உண்டி எண்.016634 நாள்.23.06.2022 (HDFC Bank)
4. தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலநிதி ரூ.440100/- (வங்கி கேட்பு உண்டி எண்.016642 நாள்.28.06.2022 (HDFC Bank)
5. உரிய பிற ஆவணங்கள்

*********

**ஆணை :-**

பார்வை 1ல் காணும் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களின் கடிதத்தின்படி மனுதாரர் M/s.M.P.டெவலப்பர்ஸ் Rep. by its Partner திரு.M.பிரவீன் GPA for திருமதி.M.மணிமேகலை, கதவு எண்.3/1B, .3/1B, மனை எண்.2, தன்னேரி தெரு, சோமசுந்தரம் நகர், பல்லாவரம், சென்னை-600043 என்பவருக்கு **குன்றத்தூர் கிராமம், பி டாட் ஜி எக்ஸ்பிரஸ் ரோடு, நில அளவை எண்.509/1A Part, புதிய நில அளவை எண்.509/1A2A, பட்டாவின்படி நில அளவை எண்.509/92 & 509/93, மனை எண்.7 & 8-ல்** Stilt Floor + 4 தளங்களுடன் கூடிய 32 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் / சுற்றுச்சுவர் / கிணறு முதலியன கட்டுவதற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 2ல் காணும் விவரப்படி நகரமைப்பு ஆய்வரால் தொழில்நுட்ப ரீதியில் கூர்ந்தாய்வு செய்து வரைபட அனுமதி வழங்க பரிந்துரை செய்யப்பட்டதின்படி பார்வை 3 மற்றும் 4ல் காணும் விவரப்படி உரிய கட்டணம் வசூலிக்கப்பட்டது.

எனவே **குன்றத்தூர் கிராமம், பி டாட் ஜி எக்ஸ்பிரஸ் ரோடு, நில அளவை எண்.509/1A Part, புதிய நில அளவை எண்.509/1A2A, பட்டாவின்படி நில அளவை எண்.509/92 & 509/93, மனை எண்.7 & 8-ல்** Stilt Floor + 4 தளங்களுடன் கூடிய 32 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் / சுற்றுச்சுவர் / கிணறு முதலியன கட்டுவதற்கு **M/s.M.P.டெவலப்பர்ஸ் Rep. by its Partner திரு.M.பிரவீன் GPA for திருமதி.M.மணிமேகலை** என்பவர் பெயரில் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபட அனுமதி அளிக்கப்படுகிறது

இந்த அனுமதியானது **27-06-2025ம்** தேதி வரை மூன்று ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். மேலும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## நிபந்தனைகள்:

1. கட்டிடத்தின் முன் பக்கத்திலும் பின் பக்கத்திலும் மற்றும் இரு பக்கங்களிலும் அனுமதிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 மற்றும் 1994–ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படி மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமிப்பு செய்வது கூடாது.

169

4. கட்டிட வேலைகள் நடக்கும்பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ நகராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரை படங்களை வைத்திருத்தல் வேண்டும்.

5.இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட கால வரையறைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.

6. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து க்ட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் ஆணையருக்கு விண்ணப்பம் செய்து ஆணை பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.

7. தற்போது மனுதாரரால் வழங்கப்பட்டுள்ள ஆவணங்களை அடிப்படையாக கொண்டு மட்டுமே இவ்வனுமதி வழங்கப்படுகிறது. கட்டிடம் கட்ட ஆணை பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி ஆணையை ரத்து செய்ய ஆணையருக்கு உரிமை உண்டு.

8. புதியதாக கட்டப்படும் கட்டிடத்தில் மழை நீர் சேகரிப்பு தொட்டி தவறாமல் அமைத்திடல் வேண்டும். மேலும் ஒப்புறுதி பத்திரத்தின்படி அனுமதிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டவாறு மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்ட பின்னரே சொத்துவரி விதிப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும்.

9. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொதுச் சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்திருத்தல் அவசியம்.

10. கட்டிடத்திலிருந்து வெளிவரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும் கழிவு நீர்த் தொட்டிகளும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

11. கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் கழிவுநீர் தொட்டிகளை சுகாதார முறையில் உறுதியாக மூடப்பட்டு கொசுத்தொல்லைகள் இல்லாமல் பராமரிக்க வேண்டும்.

12. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படவிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்து அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

13. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இந்நகராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.

14. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 30 தினங்களுக்குள்ளாக ஆணையருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

15.தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகள் 1972 பிரிவு 17பி இணைப்பு–1ன்படி பேரூராட்சி பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களில் சூரிய ஒளியினை பயன்படுத்தி தண்ணீரை சூடாக்கும் உபகரணம் பொருத்தப்பட வேண்டும்.

16. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சட்டபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

17.சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பொருத்தமான அமைப்பு அல்ல.

18. மனுதாரர் 32 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் சமையல் அறை நீர், குளியலறை நீர் மற்றும் செப்டிக் டேங்கிலிருந்து வரும் கழிவுகள் அனைத்தும் நிரம்பியதும் கட்டிடத்தினை அபிவிருத்தி செய்தவர் (Builder / Developer) அல்லது குடியிருப்புகள் கிரையம் பெற்ற நபர்களே தனது சொந்த செலவில் அகற்ற வேண்டும்.

19. பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் கழிவுநீர் சாலையில் வழிந்தோடி பாதிப்பு செய்தாலோ அல்லது அருகில் உள்ள காலியிடத்தில் தேக்கம் செய்து சுற்றிலும் உள்ள குடியிருப்புக்களுக்கு பாதிப்பு செய்தால் தங்களால் கட்டப்பட்ட கட்டிடத்தினை மூடி முத்திரையிடப்படும்.

ஆணையாளர்
குன்றத்தூர் நகராட்சி

இணைப்பு :–

அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள்

<u>பெறுநர்</u>

M/s.M.P.டெவலப்பர்ஸ் Rep. by its Partner
திரு.M.பிரவீன் GPA for திருமதி.M.மணிமேகலை,
கதவு எண்.3/1B, .3/1B, மனை எண்.2, தன்னேரி தெரு,
சோமசுந்தரம் நகர், பல்லாவரம், சென்னை-600043.

நகல் :-

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை – 600008.